**செய்தி வெளியீடு எண் : 1481** **நாள் : 27.08.2022**

**செய்தி வெளியீடு**

வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறைத் திருத்தம், 2023 தொடர்பான பல்வேறு நிகழ்வுகள் குறித்து தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரியுடன் கலந்தாய்வு செய்வதற்கு மாண்புமிகு தேர்தல் ஆணையர் திரு. அனுப் சந்திர பாண்டே அவர்கள் தமிழ்நாட்டிற்கு 27.08.2022 அன்று வருகை புரிந்தார்.

தமிழ்நாடு தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தால் நடத்தப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு தொடர்பான போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்குவதற்காக மாநில அளவிலான விழா ஏற்பாடு செய்யப்பட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் மாண்புமிகு தேர்தல் ஆணையர் திரு. அனுப் சந்திர பாண்டே அவர்கள் தலைமையில் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள அம்மா மாளிகையில் நடத்தப்பட்டது. அவ்விழாவில் திரு. சத்யபிரதா சாகு, இ.ஆ.ப., தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும் முதன்மைச் செயலர் மற்றும் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப.,மாவட்ட தேர்தல் அலுவலர், முதன்மைச் செயலர்/ ஆணையர் ஆகியோர் உடனிருந்தனர். தேர்தல் நடைமுறையில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்கும் விதமாக கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, சுவரொட்டி தயாரித்தல், நடனப் போட்டி, குறுஞ்செய்தி வினாடி வினாப் போட்டி, பாட்டுப் போட்டி, வாசகம் எழுதுதல் மற்றும் இணையவழி வினாடி வினாப் போட்டி போன்ற பல்வேறு வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. கலைநிகழ்ச்சிகளும் இவ்விழாவில் நடத்தப்பட்டது. 2022–ஆம் ஆண்டுக்கான **வாக்காளர் தேர்தல் நடைமுறையில் பங்கேற்க முறையான அறிவூட்டல்** (SVEEP) தொடர்பாக நடத்தப்பட்ட போட்டியில் பங்கேற்றவர்களின் படைப்புகளை காட்சிப்படுத்தும் விதமாக புகைப்படக் கண்காட்சியும் விழா அரங்கில் நடத்தப்பட்டது.

சத்யபிரத சாகு,
தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in